**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.**

**O.S.No. 19 Of 2013**

| | | |
|---|---|---|
| **Witness Rank** | **:** | PW2 |
| **Name of the Witness** | **:** | மணிகண்டன் |
| **Father's Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Occupation** | **:** | |
| **Address** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 7th day of July, 2025.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை :-

வாதி சிவகாமசுந்தரி என்னை அழைத்தன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எத்தனை அயிட்டம் சொத்துக்கள் என்ன சர்வே எண்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் எனது சின்ன தாத்தா நடசேனுக்கு பாத்தியம் ஆகும். நடசேன் பெயரில் பத்திரம், சிட்டா, அடங்கல் எதுவும் கிடையாது. நடசேனுக்கு முன்பாக அவரது அப்பா ஐய்யாசாமிக்கு வழக்கு சொத்துக்கள் பாத்தியம் ஆகும். அய்யாசாமிக்கு மாணிக்கம், ஆதிமூலம், நடேசன் என 3 மகன்கள். அவர்களுக்குள் எழுத்து மூல பாகம் கிடையாது. 40, 50 வருடங்களுக்கு முன்பாக அதாவது நான் பிறப்பதற்கு முன்பாக வாய்மொழியாக பிரித்துக் கொண்டார்கள். ஜகதாம்பாம்மாள் 1ம் பிரதிவாதியான பெருமாளுக்கு உயில் எதுவும் எழுதி வைக்க வில்லை. எனக்கு உயில் எழுதிய

விவரம் தெரியாது என்றாலும் உயில் எதுவும் இல்லை என தவறாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. அய்யசாமி குடும்பத்திற்கு பாகம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும் வாதிக்கு சாதகமாக அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

| |
|---|
| *Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*<br><br>*I Additional District Judge Cuddalore.* |